**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: 2456-5148

‘

# History of Tamil Prose and the Work of Commentators

**Professor M. Kumaraguru**

Tamil Department, Guest Lecturer (P.A.K) Arignar Anna Government College of Arts, Villupuram
kumaragurutamil@g.mail.com, Cell: 8870807363

## Abstract

Commentators have occupied an equal place in the history of Tamil literature as authors. A prose commentary on a book written in one period or in the same period (in a more recent case) is called a commentary. Texts, which aim to bridge the generation gap and the gap between the writer and the reader, occupy a very important place in Tamil tradition. It can be said that these texts did to some extent the work that criticisms do today.

# தமிழ் உரைநடை வரலாறும் உரையாசிரியர்களின் பணியும்

முனைவர்.மு.குமரகுரு

தமிழ்த்துறை
கௌரவ விரிவுரையாளர் (பெ.ஆ.க) அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்
kumaragurutamil@g.mail.com, Cell: 8870807363

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் நூலாசிரியர்களுக்குச் சமமாக உரையாசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒரு காலத்தே எழுதப்பட்ட நூலுக்கு இன்னொரு காலத்திலோ அதே காலத்திலோ (அது அருகிய வழக்கு) எழுதப்படுகின்ற உரைநடையிலான விளக்கத்தை, உரை என்கிறோம். தலைமுறை இடைவெளியையும், எழுதியோன் படிப்போன் என்போருக்கு இடையேயுள்ள இடைவெளியையும் குறைக்கின்ற நோக்கத்தில் அமைகின்ற உரைகள், தமிழ் மரபில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இன்று, திறனாய்வுகள் செய்கிற வேலையை, அன்று இந்த உரைகள் ஓரளவு செய்தன என்று சொல்லலாம்.

**உரைநடை**

“உரைநடை என்பது என்ன? அதன் விளக்கம் யாது? உரை நடை என்பது தொடர்மொழி. உரை ஒரு சொல், நடை ஒரு சொல். உரையானது நடந்து செல்லும் நெறியே உரைநடையாகின்றது. பல்வேறு சந்தங்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்பப் பாவி நடக்கும் பாவினும் வேடுபடுத்த வேண்டி இதை உரைநடை என்று வழங்கினார்கள் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். 'உரை' என்னும் சொல் தமிழில் நெடுங்காலமாகவே வழக்கத்தில் இருந்து வருகின்றது. உரை என்பது எழுத்துக்கள் வரிவடிவாய் அமைந்து ஒலி வடிவாய் அவற்றின் தன்மையை விளக்க வருவது என்றுதான் பலரும் பொருள் கொள்கின்றனர். உரைக்கப்படுவதால் உரையாயிற்று என்பர்”[1]. அதாவது, வாயினால் ஒன்றைப் பற்றிப் பொருள் தோன்ற உரைப்பதே உரை எனக் கொண்டனர் என்னலாம்.

- ✓ உரைநடை என்பதற்கு வசனநடை எனத் தமிழ் லெக்சிகனும் கூறுகிறது. 'வசனம்” என்ற வடமொழிச்சொல்லுக்கு 'உரை” என்பது தமிழ்ச்சொல்லாகும். உரைக்கப்பெறுவது உரையாகும். உரைநடை என்பது எழுத்து, சொல் என இரண்டாலானதாகும்.
- ✓ ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியும் 'உரைநடை என்பது செய்யுளுக்குரிய சீர் இல்லாமல் பேசப்பெறும் அல்லது எழுதப்பெறும் மொழியின் அமைப்பாகும். உள்ளதை உள்ளவாறு கூறுந்தன்மையுடையது” என்றும் கூறுகிறது. சேம்பர்ஸ் இருபதாம் நூற்றாண்டு ஆங்கில அகராதியும் 'இதே கருத்தைக் கூறுகின்றது. 'செய்யுளுக்குரிய சீர் முதலியவையின்றிப் பொருளை நேராக விளக்கும் சொற்களையுடைய அமைப்பே உரைநடை. சாதாரணமாகப் பேசுவதும் எழுதுவதும்தான் இது” என விளக்கம் கூறுகிறது.

**தொடக்ககால உரைநடை:**

தொடக்கக் கால உரைநடையின் தன்மை செய்யுளிலிருந்து பெரிதும் மாறுபடாத நிலையிலேயே இருந்தது. இலக்கிய வரலாற்றில் உரைநடை மெதுவாகத்தான் வளர்ச்சியடைந்துள்ளது. மனிதன் உருவாக்கிய பல்வேறு துறைகளும் செய்யுள் வடிவிலே இருந்தமையால், உரைநடை மற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில் செய்யுள் நூல்களுக்குத் துணைநூல்களாகவும் சார்பு நூல்களாகவும் தமிழில் உரைநூல்கள் தோற்றம் பெற்றன எனலாம். இஃது தமிழ்மொழியில் மட்டுமின்றி உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளில் செய்யுளுக்குப் பொருளும் விளக்கமும்கூற உரைநடை பயன்படுத்தப்பட்டது என அறிகின்றோம். தமிழில் 'உரை' என்பதற்குச் சொற்பொருள் எனும் விளக்கமும் காணப்பெறுவது இங்குக்குறிப்பிடத்தக்கது. மேலும் கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, காண்டிகையுரை, விருத்தியுரை என்பவையெல்லாம் செய்யுளுக்கு உரைக்கப்பெறும் உரையாகும். இலக்கிய வரலாற்றில் உரைநடை வளர்ச்சி புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கிறது. இலக்கிய உலகில் உரைநடை வளர்ச்சிக்குப்பின் இலக்கியம் சமுதாயப் பொருளாயிற்று என டாக்டர்க. கைலாசபதி கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

“எளிமையாக விளங்கிக்கொள்ளுமாறு உரைப்பதே உரை எனக் கார்டினர் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது”[2]. உள்ளதை உள்ளவாறு உரைப்பது உரைநடை; அஃது எளிமையாகயாவராலும் உணர்த்தப் பயன்படுவதாகும். செய்யுளுக்குரிய ஓசையுடைமையை உரைநடையிலும் காணலாம். சிறந்த சொற்கள் அழகுபட அமைவது செய்யுள் எனின், சொற்கள் பொருளை விளக்குமளவு பயன்படுவது, உரைநடையாகும்.

உரைநடையின் இயல்புகள்

உரைநடையாயினும் செய்யுள் நடையாயினும் படைப்பாளரின் தனித்தன்மையையொட்டியே அவருடைய படைப்பின் நடை அமைகிறது. படைப்பாளன் பயன்படுத்தும் சொற்கள், சொற்றொடர்கள்,



KALANJIYAM

மாற்றியமைக்கும் திறன், வாக்கிய அமைப்பு, ஒலி நயம் போன்றவை அவருடைய தனித்தன்மைக்கேற்பவே அமைவனவாகும். கருத்து, உணர்ச்சி இவற்றின் தெளிவிற்கேற்ப நடை செம்மை பெறுகிறது. இந்நிலையில் நடையின் பண்புகளாக இரண்டினைக் குறிப்பிடலாம். ஒன்று

**1. ஆற்றல்.**
**2. கருத்து நுட்பம்.**

இதில் ஆற்றல் பொருளைத் தெளிவாக உணர்த்துவதோடு படிப்போரின் கவனத்தை ஈர்க்கிறது. கருத்து நுட்பம் பொருளைச் சிறிதும் பிறழ்வின்றி மிக நுட்பமாக உணர்த்துவதாகும்.

நடையின் குணங்களாக வழுவின்மை, சுருங்கக் கூறல், விளங்க வைத்தல், இனிதாதல், விழுப்பயன் தருதல் முதலிய வற்றைப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

வ.சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள் உரைநடையின் இயல்புகளை எழுதியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை பின்வரும் கூறலாம்.

**1. உரைநடையில் உரிய இடத்தில் உரிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.**
**2. நல்ல உரைநடையானது தெளிவாக இருத்தல் வேண்டும்.**
**3. வழக்கிலில்லாச் சொற்களைத் தவிர்க்க வேண்டும்.**
**4. புதியசொற்களை அமைத்துக் கொள்வதால் உரைநடைவளம் பெறுவதோடு, தமிழ்மொழியும் வளம்பெறும்.**
**5. உரைநடையில் மரபுத்தொடர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.**
**6. படிப்பவர்களுக்கு விளங்கும் வகையில் பத்திகளும் உரைநடையில் அமைக்கவேண்டும்.**
**7. வழக்கிலுள்ள சொற்களைப் பயன்படுத்தலாம். பிறமொழிச்சொற்களைப் சந்திபிரித்து எழுதினால் உரைநடை இனிமை பயப்பனவாக அமையும்.**
**8. உரைநடை எழுதுவோர்க்கு மொழியியல் அறிவும் வேண்டற்பாலதாகும்”[3].**

“வையாபுரிப்பிள்ளை அவர்களும் இதே கருத்தை வலியுறுத்துகிறார்”[4].

“சாமென் என்னும் அறிஞர் உரைநடையின் இயல்புகளாக

**1. நுட்பம்**
**2. எளிமை**
**3. நயம்**

என்ற மூன்றையும்குறிப்பிடுகின்றார்.

மேலும், உரைநடையை நன்கு ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள்,

**1. கருத்து**
**2. தெளிவு**
**3 .சந்தம்**
**4. உணர்ச்சி**

ஆகியவற்றை உரைநடையின் இன்றியமையாதப் பண்புகளாகக் குறிப்பிடுகின்றனர்”[5].

மாத்யூஆர்னால்டு (ஆயவாநற யுசழெடன)25 அவர்கள் உரை நடைக்குரிய இன்றியமையாப் பண்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகின்றார்.

**1.ஒழுங்கு**
**2.ஒருருப்படுத்துதல்**
**3.நுட்பம்**
**4.சமநிலை**

தமிழில் சமநிலை தமிழில் சமநிலை உரைநடையயை நச்சினார்க்கினியரின் சிந்தாமணி உரையில் காணலாம்.

தொல்காப்பியக் கால உரைநடை

உரை என்பதற்குச் சொல்லுதல் என்று பொருள். ஒன்றைப் பற்றிச் சொல்லும் போது எவ்வாறெல்லாம் விளக்கிச் சொல்ல வேண்டுமென்பதே உரையில் சொல்லும் முறையாகும். இவ்வாறு தோன்றிய உரை பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாக அமைந்தது. மொழிக்கும் வாழ்க்கைக்கும் இலக்கணம் கூறும் இலக்கண நூல்கள், உரைக்கும் இலக்கணத்தைக் கூறுகின்றன.

தமிழில் தொல்காப்பியம் மிகப் பழமையான இலக்கண நூலாகும். அத்தொல்காப்பியத்தில், அதன் ஆசிரியர் தொல்காப்பியர் மரபியலில் எழுதிய உரை பற்றிய செய்திகளே, நமக்கு அக்கால உரைநடை குறித்து அறிவதற்கு உதவுகின்றன. தொல்காப்பியர்,

1.காண்டிகை
2.உரை

என்றும் இருவகை உரை அமைப்புகளைக் காட்டுகின்றார். அவற்றில்,

> "பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
> கரப்பின்று முடிவது காண்டிகை யாகும்" (பொருள்.647)

என்னும் நூற்பா காண்டிகை உரையின் இலக்கணத்தை உணர்த்துகின்றன.

> "சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
> இன்றி யமையாது இயைபவை எல்லாம்
> ஒன்ற உரைப்பது உரை எனப் படுமே" (பொருள்.649)

என்னும் உரையின் (விருத்தியின்) இயல்பினை எடுத்துரைக்கின்றன. இவ்விரு வகை உரை முறைகளும் அவர் காலத்து நிலவிய உரைகூறும் மரபு என்று கருதலாம்.

மேலும், தொல்காப்பியர் செய்யுளை ஏழாக வகுத்துக் கூறுகிறார். அவற்றுள் ஒன்று, அடிவரையறையுள்ள செய்யுட் பகுதியாகிய பாட்டு, மற்றவை அடிவரையறையற்ற செய்யுள்களை நூல், உரை, விடுகதை, பழமொழி மந்திரம் குறிப்பு மொழி என ஆறாகக் குறிப்பிடுகிறார். பின்னர் அதிலுள்ள உரை வகையை,

> "பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
> பாவின்று எழுந்த கிளவி யானும்
> பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
> பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
> உரைநடை வகையே நான்கென மொழிப" (தொ.செய்.117)

என ஒரு நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னூலார் குறிப்பிடும் உரைநடை

நன்னூலின் பொதுப்பாயிரம் உரையின் பொது இலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகின்றது,

> "பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள் தொகுத்துரை
> உதாரணம் வினாவிடை விசேடம் விரிவு
> அதிகாரம் துணிவு பயனோடு
> ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே" (பொதுப்.20)

இச்சூத்திரத்திற்கு மயிலைநாதர் பின்வருமாறு பொருள் கூறுகின்றார். "பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்" என்பார்.

உரைநடை கலந்த செய்யுள்:

குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரப் பதிகத்தில்,

"வாழ்த்து வரந்தரு காதையொடு இவ்வா றைந்தும்
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" (சிலம்பு. பதிகம்.85-87)

என்று செய்யுள் அடியிலேயே உரைநடை பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. அது மட்டுமன்றி உரைபெறு கட்டுரை, உரைபாட்டுமடை என்கின்ற பெயர்களோடு இக்காப்பியத்தில் இடைஇடையே உரைநடை கையாளப்படுகின்றது. உதாரணமாக 'ஒரு பரிசா நோக்கிக்கிடந்த புகார்க்காண்டம் முற்றிற்று', 'பாண்டியன் நெடுஞ்செழியனோடு ஒரு பரிசா நோக்கிக்கிடந்த மதுரைக்காண்டம் முற்றிற்று' முதலிய கவி அடிகள் உரைநடை போலவே காணப்படுகின்றன. கானல்வரி, ஆச்சியர் குரவை, குன்றக்குரவை முதலிய காதைகளிலும் உரைநடை சாயல்களை அவதானிக்கலாம். இது தொடர்பாக 'இக்கவிதைத் தன்மை சிலப்பதிகார உரைப்பாட்டுமடை போன்றது. தமிழ் உரைநடையின் ஆரம்பகாலத்தை கவிதை நிலையிலிருந்து உரை நிலைக்குத் தமிழ் மாறுகிற ஒருகாலப் பகுதியை உரை காட்டுகிறது"[6] என டாக்டர் மு.வரதராசனார் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இதன்பிறகு கி.மு. 700 –க்கு முன் தகடூர் யாத்திரை எனும் நூல் ஆசிரியமும் வெண்பாவும், உரைநடையும் கலந்த நூலாகும். பிறகு பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய பாரத வெண்பா நூலும் உரைநடை கலந்து எழுதப்பட்டதாகும்.

**முதல் உரை நூல்:**

இறையனார் அகப்பொருள் உரையே தமிழ்மொழியில் தோன்றிய முதல் உரை நூலாகும். பழந்தமிழ் உரை நடையின் சிறப்பை எல்லாம் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விளக்குவதிலும், பிறர் கருத்தைக் காரணத்தோடு மறுப்பதிலும் இவ்வுரையாசிரியரின் திறமை ஒப்புயர்வற்றது. வலிவும் வனப்பும் ஒருங்கே வாய்ந்த இதன் உரைநடை, தமிழிலக்கியவுலகம் அதற்கு முன்கண்டிராத

ஒரு புதுமையாய் அமைந்தது. இந்த உரைநடையைத்தான் பிற்காலத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் அனைவரும் கற்றுத் தேர்ந்து பின்பற்றினர்.

**உரை பகுப்புகள்:**

நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்களும் தோன்றிய காரணத்தினால் உரையாசிரியர்களை பகுத்து ஆராய வேண்டிய அவசியமாகிறது. அந்தவகையில்

1. இலக்கண உரையாசிரியர்கள்
2. இலக்கிய உரையாசிரியர்கள்
3. சமய இலக்கிய உரையாசியர்கள்
4. பாட்டியல் உரையாசிரியர்கள்
5. சாசனத் தமிழ் உரைகள்
6. இடைச்செருகல் உரைகள்

என்று உரைகள் பல நிலையில் பகுக்கலாம்.

1. இலக்கண உரைகள்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சான்றோர்கள் வாழ்ந்த காலத்தை உரையாசிரியர்கள் காலம் என்கிறோம். இதனை, கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை எனலாம். இதன் பின்னரும் இலக்கண இலக்கியங்களுக்கு உரை வகுத்த பலர் இருந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், பேராசிரியர் போன்றோர் உரை எழுதியுள்ளனர். இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்டது



KALANJIYAM

தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் இளம்பூரணரும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும், பொருளதிகாரம் உட்பட மூன்றுக்கும் நச்சினார்க்கினியரும் உரை எழுதிப் புகழ் பெற்றனர். இலக்கண நூல்களுக்கு மட்டும் உரை எழுதியவர்கள் இலக்கண உரையாசிரியர்கள் ஆவார். இவர்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1.நக்கீரர்
2.இளம்பூரணர்
3.பேராசிரியர்
4.சேனாவரையர்
5.குணசாகரர்
6.கல்லாடர்
7.மயிலைநாதர்
8.ஆறுமுக நாவலர்
ஆகியோர் ஆவார்.

**இலக்கிய உரையாசிரியர்கள்**

இலக்கிய உரையின் முக்கியமான பண்பு, பொருளை விளக்குவதோடன்றிக் குறிப்பிட்ட அவ்விலக்கியப் பகுதியின் நயத்தையும் நோக்கத்தையும் விளக்குவதும் ஆகும். இலக்கியம் கூறுகிற செய்தியின் உட்பொருளையும், அது பிறவற்றோடு உறவு கொண்டிருக்கும் திறனையும், குறிப்பிட்ட இலக்கிய ஆசிரியனின் தனித்திறனையும் இலக்கிய உரை காட்ட வேண்டும். இலக்கியத்தின் வழியாக வெளிப்படுகின்ற அல்லது அதிலிருந்து சுட்டி உரைக்கக்கூடிய வரலாற்றுச் செய்தி, பண்பாடு, தத்துவம் ஆகியவற்றையும் இலக்கிய உரை சொல்லுகிறது.

தமிழில் இன்று காணக்கூடிய உரைகளில், காலத்தினால் முந்தியது இறையனார் அகப்பொருள் உரையே என்பதில் கருத்து வேறுபாடில்லை. அது, கி.பி.9ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. கி.பி. ஒன்பதிலிருந்து பதினான்கு முடிய நிறைய உரைகள் தோன்றின. இந்த இடைக்காலத்தை உரைநடையின் காலம் எனலாம். ஆனால் இலக்கண உரைகளுக்குப் பின்னர், இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் இலக்கிய உரைகள் தோன்றின என்று தோன்றுகின்றது. மொழியின் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சி நிலைகளின் பின்னணியில் இலக்கணங்களுக்கு உரைகள் மிக அவசியமாக இருத்தல் போன்று, இலக்கியங்களுக்கு அத்தகைய நிலை இல்லை போலும். இலக்கியங்கள், புலவர்கள் பலர் நிறைந்த அவைகளிலே ஓதப்பட்டன. இந்நிலையில் முதன்முதலில் அருஞ்சொற்களுக்குப் பொருள் தருதலும், இலக்கணக் குறிப்புகளும் அணி நயங்களும் குறிப்பிடுதலும், சில வரலாற்றுக் குறிப்புகள் தருதலும் என்று இவையே வழக்கத்திலிருந்தன. சிலப்பதிகாரத்திற்கு முதலில் அரும்பதவுரை தோன்றியது. இன்றும் இது வழக்கிலுள்ளது. அதுபோல், ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலிய சில சங்கப் பாடல்களுக்கும் குறிப்புரைகளும், சுருக்கமான பொழிப்புரைகளும் தோன்றின. இந்தக் குறிப்புரைகளின் ஆசிரியர்கள் யாவரென்று தெரியவில்லை.

சிலப்பதிகாரத்துக்கு விரிவான உரையெழுதிய அடியார்க்கு நல்லார், சிலம்பின் பழையவுரையைப் பெரிதும் பின்பற்றியே உரையெழுதினார். அடியார்க்கு நல்லார் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கூறப்படுகிறார். ஆனால் குறளுக்கு உரை கண்டவர்களாகக் கூறப்படும் பதின்மரில் இவரே இறுதியானவர். அப்படியாயின், இவருக்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பே அதாவது, அடியார்க்கு



KALANJIYAM

நல்லாருக்கும் முன்பே, திருக்குறளுக்கு உரைகள் வந்திருக்கின்றன எனலாம். நச்சினார்க்கினியர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இலக்கிய உரையாசிரியர்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1.அடியார்க்கு நல்லார்
2.பரிமேலழகர்
3.அரும்பத உரையாசரியர்
4.தெய்வச்சிலையார்
5.மணக்குடவர்
6.பரிதி
7.பரிமேலழகர்
8.பரிபெருமாள்
9.காலிங்கர்

ஆகியோர் குறிப்பிடத்தகுந்தோர் ஆவார்.

**இருபதாம் நூற்றாண்டில் உரைநடை**

தமிழ் உரை நடையின் பெருவளர்ச்சி இருபதாம் நூற்றாண்டை ஒட்டியே அமைந்தது என்னலாம். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக் கத்திலும் அறிஞர் பற்பலர் தோன்றித் தமிழ் இலக்கியத்தையே வளம்படுத்தினர். “இருக்குமிடம் தெரியாது மறைந்து கிடந்த சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் இக்காலத்திலேதான் ஒன்றின்பின் ஒன்றாக வெளிவரலாயின. இலக் கண நூல்களும் அவற்றின் உரைகளும் இருந்த இடந்தி லிருந்து வெளிக்கிளம்பித் தங்களை மக்களுக்கு அறிமுகம் செய்துகொண்ட காலமும் இதுதான். அத்துடன் நாளிதழ் திங்கள் இதழ் என்னும் வகையில் தமிழில் பத்திரிகைகள் தோன்றி நாட்டு மக்களுக்கு அறிவையும் உணர்வையும் ஊட்டத் தொடங்கிய காலமும் இதுதான். யாழ்ப்பாண நாட்டிலிருந்து தமிழ்ப் புலவர் சிலர் இங்கு வந்து தமிழ் வளர்த்த காலமும் இதுவே. மற்றும் தமிழின் தொன்மை பற்றியும் செழுமை பற்றியும் தமிழரல்லாப் பிறரும் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்திலே சிற்சில நூல்கள் எழுதி வெளியிட்டனர். பல கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்தி லும் தமிழ் மொழி பற்றி வெளி வரலாயின. சுருக்கமாகக் கூறின், இன்று தமிழ் நாடு வளர்ச்சி பெற்றுள்ளமைக்கு அடிப்படையாயமைந்தவர்கள் இந்த நூற்றாண்டின் தொடக் கத்திலும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் வாழ்ந்த புலவர்களேயாவார்கள் எனக் கூறலாம்”[8] என்பார்.

**ஆறுமுக நாவலருக்கு முன்பும் பின்பும் உள்ள உரைநடை**

தமிழ் உரைநடை வரலாற்றில் ஆறுமுக நாவலரின் உரை மிகவும் குறிப்பிடத்தக்க தக்க தொன்றாகும். உரையாசிரியர் நடை களின் உரைநடை காலத்திற்கேற்ற நடை என்றும் கற்பவர் தகுதிக்கேற்ற புலவர் நடை என்றும் கூறலாம். செந்தமிழ் நடை என்றும் கூறலாம். உரைநடையின் பயன்பாட்டுக்கான சமூகத்தேவை ஏற்படாமையினால், உரைநடையின் பயன்பாட்டெல்லை பன்முகப்பட்ட வளர்ச்சியடைய முடிய வில்லை. சமூக-அரசியல்-பொருளாதார மாற்றத்தினால் புதிய உரைநடை தோன்றலாயிற்று. மேலை நாட்டாரின் வருகையினால் இஃது வளர்ச்சி பெற்றது. ஆறுமுக நாவலர், பழைய உரைநடையை மாற்றிப் புதிய உரைநடைக்குக் கால்கோள் செய்தார். 'சிறுசிறு வாக்கியங்களின் திட்பம், அவை கோவையாகப் பத்தி பத்தியாக ஒற்றுமை நயம்பட்டு விளங்கும் நுட்பம், கட்டுரை முழுதும் ஒரு பொருளாய் அமையும் இனிமை, கருத்தின் தெளிவு, சொற்களின் எளிமை, அழகு, இலக்கண நயம் இவை எல்லாம் இவரது உரைநடையில் காணலாம். முதலிலிருந்து முற்ற முடியும் வரை ஒரே நடை தான்; ஒரு வேற்றுமையும் இல்லை' எனப் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார். ஆறுமுக நாவலர் இலக்கணத் தூய்மைக்கு முதன்மை அளித்துப்

பொதுமக்களுக்கு விளங்கும் எளிய நடையில் எழுதினார். உரையாசிரியர்களின் நடைக்கும் இன்றைய நடைக்கும் இவரது நடை பாலமாக விளங்குகின்றது. ஆறுமுக நாவலர் மேலைநாட்டாரின் நடையைப் பின்பற்றியிருந்தால் உரைநடையின் வரலாறே மாறியிருக்கும். பதினெட்டாம் நூற்றாண்டில் முகிழ்த்த உரைநடை பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலர் நடையில் வளர்ச்சி பெற்றது. ஒருவரின் ஆளுமையும் தனித்தன்மையும் அறிவாற்றலும் அவரது உரைநடையால் புலப்படுத்தப்படுவது உண்மையானால் அவ்வுண்மைக்கு இலக்கியமாக நாவலரின் நடையைக் கூறலாம். இவரை ‘உரைநடையின் தந்தை’ என்று கூறுகின்றனர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் இவரை ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ என்று குறிப்பிடுகிறார். எனவேதான் இவ்வியல் இவரை மையமாக வைத்து, இவருக்கு முன்பிருந்த உரைநடை, இவருக்குப் பின்பிருந்த உரைநடை முதலியவற்றை ஆராய்கின்றது.

**உரையின் பயன்கள்**

உரையாசிரியர்கள் தாம் கற்றுத் தேர்ந்த புலமைச் செல்வத்தை எல்லாம் தம் உரைகளில் கொட்டி எழுதுவதால் நாம் எளிதாகக் கருத்துகளைப் புரிந்து கொள்கின்றோம்.

1. சில பாடல்களுக்கு உரையாசிரியர்கள் மிக விரிவான உரையும், நயமிக்க விளக்கமும் எழுதி இருப்பதால், அவை இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டியாய் அமைகின்றன.
2. தமிழ்மொழியின் அமைப்பு காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் மாறுதல், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் உரைகள் நமக்கு உணர்த்துகின்றன.
3. மறைந்து போன தமிழ்நூல்களின் பெயர், அந்த நூல்களின் சில பகுதிகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வருபவை உரைகளே ஆகும். இவ்வாறு பல உதவிகள் செய்யும் உரை நூல்களைத் தந்த உரையாசிரியர்களை நாம் என்றென்றும் போற்ற வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது உரையின் வளர்ச்சியே யாகும். தமிழ் இலக்கியத்தில் உரைநடை தோன்றிய வரலாற்றைக் காலந்தோறும் விரிவாகக் கண்டறிய வேண்டும்.

**உரையாசிரியர்களின் பணி:**

உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின், பழம்பெரும் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைக்கப்பட்டுள்ள விலை மதிப்பில்லாத பொருள்மணிக் குவியல்களை நாம் பெற முடியாமலே போய் இருக்கும். பண்டைய உயர் நூல்களின் உண்மைக் கருத்துக்களைத் தம் மதி நுட்பத்தால் கண்டு உரை வரைந்த ஆசிரியர்களின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும்போது, “இவரெல்லாம், மிக விரைவாக ஓடிச் செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி அந்நீரோட்டத்தின் வன்மையை இற்றென உணர முற்படுவார் போலத் தாம் உரையெழுத மேற்கொண்ட சான்றோர் செய்யுள்களிலுள்ள சொற்களின் செலவை எதிர்த்தாராய்ந்து உண்மைப் பொருள் கண்டு உலகிற்குதவியவராவர்”[9] எனக் கூறுகின்றார் பண்டிதமணி ((மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.13). மேலும் அவர், “நூலாசிரியர் உள்ளக் கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவு பெற எடுத்தெழுதும் வன்மையாளரே உண்மை உரையாசிரியராவர் என்றும், “ஒரு புலவன் காலக் கழிவு நோக்காது நெடிதாராய்ந்து தம் வாணாளில் ஒரு நூற்கு உண்மையுரை எழுதி முடிப்பினும் போதியதே”[10] (மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.27) என்றும் உரையாசிரியர்களின் தமிழ்ப் பணியை வியந்து போற்றுகின்றார்.

**முடிவுரை**

தமிழ் உரைநடைவரலாற்றில் சிறப்பிடம் பெறுவது இறையனார் களவியல் உரையாகும். இதனையே முதல் உரைநடை என்றும் கூறப்படுகிறது. இவ்வுரைநடையில் கவிதைப்பண்பு மிகுந்திருப்பதைக் காண்கிறோம். எதுகை மோனை முதலிய ஓசைப்பண்புகளை யொத்த செய்யுள் நடைபோன்றுள்ளது. வினா விடை என்ற முறையிலும் அமைந்துள்ளது.

மணியும் பவளமும் கலந்தாற்போன்று வடமொழியும் தமிழும் கலந்து 'மணிப்பிரவாளநடை' என்றொரு நடை பல்லவர் காலத்தே எழுந்தது. ஸ்ரீபுராணம், கத்திய சிந்தாமணி ஆகியவை சமணர் காலத்தில் தோற்றம் பெற்ற மணிப்பிரவாளநடையைப் பிற்காலத்தில் வைணவர்கள் வளர்த்தார்கள். ஆனால், இந்நடைதமிழில் காலூன்றவில்லை என்பதை அறிய முடிகிறது.

களவியல் உரைக்குப் பின்னர் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களுக்கும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய இலக்கிய நூல்களுக்கும் உரையாசிரியர்கள் உரை எழுதினர். இவ்வுரையாசிரியர்களின் நடையைப் புலவர் நடை என்றும் காலத்திற்கேற்ற நடை என்றும் கற்பவர் தகுதிக்கேற்ற நடை, கற்பிக்கும்முறை உரைநடை என்றும் கூறுவர்.

'தமிழில்தனி உரை நடைநூல் ஐரோப்பியரால் முதல் முதல் உண்டாக்கப்பட்டது" என மயிலை சீனி. வேங்கடசாமி' கூறுவது இங்குக்குறிப்பிடத்தக்கது. மேலைநாட்டார் வருகைக்குப்பின்தான் தமிழ் உரைநடை வளர்ச்சியும் வளமும் பெற்றது. தமிழில் முதன் முதலாக எழுதப்பெற்ற உரைநடை நூல்கள் தத்துவ போதகரின் படைப்புக்களாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. அ.மு.பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, சீதைப்பதிப்பகம். பக்.ஆய்வு முன்னுரையில்.
2. சு.சக்திவேல், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, பக்.11
3. மேலது பக்.20
4. வையாபுரிபிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 110, 111)
5. மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, பக்.51
6. சு.சக்திவேல், இருபதாம்.....பக்.18-19)
7. தமிழின் மறுமலர்ச்சி பக். 110, 111)
8. அ.மு.பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, பக்204
9. மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி), ப.13

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.